සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

32 T II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2010 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2010 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2010

ව්‍යාපාර අධ්‍යයනය II
வணிகக் கல்வி II
Business Studies II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

சுட்டெண் :..............................

அறிவுறுத்தல்கள் :

※ பகுதி I இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்திலேயே** விடைகள் எழுதப்படுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் உரிய புள்ளி 01 ஆகும்.

※ பகுதி I, பகுதி II ஆகிய இரண்டுக்கும் விடையெழுதிய பின்பு இரு விடைத்தாள்களையும் **ஒன்றாக இணைத்துக்** கையளிக்கவும்.

## பகுதி I

※ 01 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகப் பொருத்தமான விடையின் அருகில் உள்ள பெட்டியில் "✓" என அடையாளமிடுக. உ-ம்: ✓

1. A - நெகிழ்வுத்தன்மை, ஆக்கத்திறன், நன்நோக்கு, வாய்ப்புப் பகுப்பாய்வு
   B - ஆர்வம், தன்னம்பிக்கை, நன்நோக்கு, சுயாதீனம்
   C - திடசங்கற்பம், அர்ப்பணிப்பு, தொடர்பாடல், திருப்தி
   D - சமயோசிதம், கற்பனை, நெகிழ்வுத்தன்மை, அர்ப்பணிப்பு
   E - நெகிழ்வுத்தன்மை, புரிந்துணர்வு, ஆர்வம், தன்னம்பிக்கை,

   மேலே தரப்பட்டுள்ளவற்றுள் முயற்சியாண்மை சார்ந்த சிறப்பியல்புகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதி எது?

   (1) A, B, C
   (2) A, B, D
   (3) B, C, D
   (4) B, D, E
   (5) C, D, E


2. ※ அகிலன் என்பவர் தனது தந்தையிடமிருந்து வாரிசுரிமையாகப் பெற்ற தொழிற்சாலையை விரிவுபடுத்தியதுடன் அதற்குப் புதிய இயந்திரங்களையும் அறிமுகப்படுத்தினார்.
   ※ தினுஷா என்பவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலம் உழைத்த தனது பணத்தை முதலீடு செய்ததன் மூலம் உல்லாசப் பயணிகள் ஹோட்டல் ஒன்றைத் தொடங்கினார்.
   ※ கமலினி என்பவர் தனது மரபுரீதியான சில்லறை வியாபாரத்தை ஒரு சிறப்புச் சந்தையாக (super market) மாற்றியமைத்தார்.
   ※ அனந்திகா என்பவர் தனது சொந்தப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு சூழலுக்கு நேசமான நுளம்புச் சுருள்களை உற்பத்தி செய்து விநியோகித்தார்.
   ※ கார்த்திகா என்பவர் சூரியசக்தியால் இயங்கும் மின்குமிழ்களுக்கான ஆக்க உரிமையை வெளிநாட்டிலிருந்து பெற்று அவற்றை உள்ளூர் சந்தைக்காக உற்பத்தி செய்து விநியோகித்தார்.

   மேலே குறிப்பிடப்பட்டுள்ளவர்களுள் ஒரு முயற்சியாண்மையாளராக எந்நபரைக் கருதமுடியும்?

   (1) அகிலன்
   (2) தினுஷா
   (3) கமலினி
   (4) அனந்திகா
   (5) கார்த்திகா

[பக். 2 ஐப் பார்க்க

3.



நிறுவன அமைப்பு வரைபடம் ஒன்றின் மாதிரி மேலே தரப்பட்டுள்ளது. இவ்வகையான நிறுவன அமைப்பு வரைபடத்தின் மூலம் எடுத்துக் காட்டப்படும் அடிப்படை முகாமைத்துவத் தத்துவம் யாது ?

(1) பொறுப்பு (responsibility)
(2) வகைகூறல் (accountability)
(3) அதிகாரம் (authority)
(4) கட்டளைச் சங்கிலி (chain of command)
(5) தீர்மானம் எடுத்தல் (decision making)

4. பின்வருவனவற்றுள் மிகவும் பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க

(1) செயற்பாட்டு மட்ட முகாமையாளர்களிலும் பார்க்க உயர் மட்ட முகாமையாளர்களுக்குக் கூடுதலான தொழினுட்பத் திறன்கள் தேவையானதாகும்.
(2) உயர்மட்ட முகாமையாளர்களிலும் பார்க்க நடுத்தர மட்ட முகாமையாளர்களுக்குக் கூடுதலான எண்ணக்கருவாக்கத் திறன்கள் தேவையானதாகும்.
(3) செயற்பாட்டு மட்ட முகாமையாளர்களுக்கு எந்தவொரு எண்ணக்கருவாக்கத் திறன்களும் தேவையானதல்ல.
(4) சகல மட்டத்திலுள்ள முகாமையாளர்களுக்கும் மானிடத்திறன்கள் சம அளவில் தேவையானதாகும்.
(5) சகல மட்டத்திலுள்ள முகாமையாளர்களுக்கும் எண்ணக்கருவாக்கத்திறன்கள் சம அளவில் தேவையானதாகும்.

5. ஏனைய முகாமைத்துவத் தொழிற்பாடுகளுக்கு வழிகாட்டுவதற்கான அடிப்படை முகாமைத்துவத் தொழிற்பாடு எது ?

(1) திட்டமிடல் (planning)
(2) ஒழுங்கமைத்தல் (organizing)
(3) நெறிப்படுத்தல் (leading)
(4) கட்டுப்படுத்தல் (controlling)
(5) கூட்டிணைத்தல் (co-ordinating)

The National e-learning Portal for The General Education

6.

| X | Y |
|---|---|
| A- நெறிப்படுத்தல் | 1. நெகிழ்வுத்தன்மை |
| B- திட்டமிடல் | 2. அளவிடத்தக்கவை |
| C- குறிக்கோள்கள் | 3. தூண்டுதலளிப்பு |
| D- அதிகாரம் | 4. மையப்படுத்தப்பட்ட |
| E- கட்டுப்படுத்தல் | 5. நியமங்களை உருவாக்குதல் |

X மற்றும் Y நிரல்களில் தரப்பட்டுள்ள பதங்கள் தொடர்பாகப் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.


(1) A - 3, B - 1, C - 2, D - 5, E - 4
(2) A - 2, B - 1, C - 3, D - 5, E - 4
(3) A - 3, B - 1, C - 4, D - 2, E - 5
(4) A - 2, B - 4, C - 1, D - 5, E - 3
(5) A - 3, B - 1, C - 2, D - 4, E - 5

7. திட்டமிடலின் நோக்கம்

(1) சாதனைகளை அளவிடுவதும் திருத்துதலுமாகும்.
(2) குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவதற்கு ஊழியர்களை ஊக்குவிப்பதாகும்.
(3) ஊழியர்களுக்கான வேலைப் பிரிப்பை நிரப்புவதாகும்.
(4) குறிக்கோள்களையும் நடவடிக்கைகளையும் உருவாக்குவதும் அவற்றை அடைவதுமாகும்.
(5) பணிகளை நிறைவேற்றுவதற்கான அதிகாரத்தையும் பொறுப்பையும் கையளித்தலாகும்.

[பக். 3 ஐப் பார்க்க

8. பின்வரும் இலாப – நட்டமற்ற பகுப்பாய்வு தொடர்பான வரைபடத்தில் (break-even diagram) காணப்படும் புள்ளிகளைச் சரியாக அடையாளப்படுத்தும் விடை எது ?




(1) A - இலாப – நட்டமற்ற புள்ளி D - மாறும் கிரயங்கள்
(2) B - இலாபம் C - நிலையான கிரயங்கள்
(3) C - நிலையான கிரயங்கள் D - மாறும் கிரயங்கள்
(4) A - இலாப – நட்டமற்ற புள்ளி B - இலாபம்
(5) C - மாறும் கிரயங்கள் D - இலாபம்

9. பின்வரும் அட்டவணையானது உற்பத்திப்பொருளையும் உற்பத்திக்கான தள அமைப்பையும் எடுத்துக்காட்டுகின்றது.

| உற்பத்திப்பொருள் | உற்பத்திக்கான தள அமைப்பு |
|---|---|
| A - மோட்டார் வாகனம் | x - நிலையான இடநிலைத் தள அமைப்பு |
| B - தளவாடம் | y - செயன்முறைத் தள அமைப்பு |
| C - விமானம் | z - உற்பத்திப்பொருள் தள அமைப்பு |

ஒவ்வொரு உற்பத்திப்பொருளுக்கும் பொருத்தமான உற்பத்தித் தள அமைப்பைத் தருகின்ற மிகவும் பொருத்தமான தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A – x, B – y, C – z
(2) A – y, B – x, C – z
(3) A – z, B – y, C – x
(4) A – y, B – z, C – x
(5) A – z, B – x, C – y

The National e-learning Portal for The General Education

10. சந்தைப்படுத்தலில் **உற்பத்தி எண்ணக்கரு** என்பது

(1) வணிகங்களானவை நுகர்வோரது தேவைகளையும் விருப்பங்களையும் கருத்திற் கொள்ளாமல் பொருட்களை உற்பத்தி செய்வதும் விற்பனை செய்வதும் ஆகும்.
(2) வணிகங்கள் கேள்வியைப் பேணுவதற்கேற்ப வழங்கலை அதிகரிப்பதாகும்.
(3) நுகர்வோரது தேவைகளையும் விருப்பங்களையும் கருத்திற் கொள்வதற்கு ஆராய்ச்சி மிக முக்கியமானதாகும்.
(4) சந்தைப்படுத்தலின் சகல முயற்சிகளோடும் நுகர்வோர் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படுவதாகும்.
(5) வணிகங்களானது உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்வதற்கு விளம்பரங்கள் மற்றும் விற்பனை மேம்படுத்தல்களை பயன்படுத்துவதாகும்.

11. உற்பத்திப்பொருள், விலை, மேம்படுத்தல், விநியோகம் (இடம்) ஆகியவற்றின் இணைப்பு

(1) இலக்குச் சந்தை
(2) சந்தைப்படுத்தல் கலவை
(3) சந்தைப்படுத்தல் குறிக்கோள்கள்
(4) மேம்படுத்தல் கலவை
(5) சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்கள்

[பக். 4 ஐப் பார்க்க

12. விளம்பரப்படுத்தலின் சிறப்பியல்புகளும் நோக்கங்களும் கீழே தரப்படுகின்றது. விளம்பரப்படுத்தலின் நோக்கங்களை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க
   (1) ஆள்சாராத் தன்மை, தகவலளித்தல், தூண்டுதலளித்தல், வியாபித்திருத்தல்
   (2) பொதுமக்களுக்குச் சமர்ப்பித்தல், ஆள்சாராத் தன்மை, தூண்டுதலளித்தல், மீளவலியுறுத்தல்
   (3) தகவலளித்தல், வியாபித்திருத்தல், ஆள்சாராத் தன்மை, ஞாபகமூட்டல்
   (4) தூண்டுதலளித்தல், மீளவலியுறுத்தல், தகவலளித்தல், ஞாபகமூட்டல்
   (5) பொதுமக்களுக்குச் சமர்ப்பித்தல், வியாபித்திருத்தல், ஆள்சாராத் தன்மை, தகவலளித்தல்

13. உற்பத்திப்பொருளொன்றிற்கான விலையைத் தீர்மானிக்கும்போது சந்தைப்படுத்துவோரால் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய பிரதான காரணி
   (1) கேள்வி, கிரயம், தரம்
   (2) கிரயம், தேவை, இலக்குச்சந்தை
   (3) இலக்குச்சந்தை, போட்டியாளர் விலை, தரம்
   (4) கேள்வி, போட்டியாளர் விலை, பயன்பாடு
   (5) கேள்வி, கிரயம், போட்டியாளர் விலை

14. குறித்தவொரு திகதியில் நிறுவனமொன்றின் நிதி நிலைமையை வெளிக்காட்டும் கூற்று எது ?
   (1) இலாப நட்டக் கணக்கு
   (2) ஐந்தொகை
   (3) காசுப்பாய்ச்சற் கூற்று
   (4) காசேடு
   (5) காசுப்பாதீடு

15. பின்வரும் நிதி முகாமைத்துவத் தீர்மானங்களுள் ஒரு முதலீட்டுத் தீர்மானமாகக் கருதக்கூடியது எது ?
   (1) இலாபத்தை நிறுத்தி வைத்தல் தொடர்பான தீர்மானம்
   (2) வங்கிக் கடன்கள் தொடர்பான தீர்மானம்
   (3) கடன்பட்டோர் தொடர்பான தீர்மானம்
   (4) பங்குகளை வழங்குதல் தொடர்பான தீர்மானம்
   (5) கடன்கொடுத்தோர் தொடர்பான தீர்மானம்

16. பின்வருவனவற்றுள் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பங்கு கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து வைக்கும் அமைப்பு எது ?
   (1) இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு (Securities and Exchange Commission of Sri Lanka)
   (2) தரகர் அமைப்பு (Broker Association)
   (3) கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையம் (Colombo Stock Exchange)
   (4) வரையறுத்த மத்திய வைப்புத்திட்டம் (தனியார்) (Central Depository system (Pvt) Ltd.)
   (5) தன்னியக்க வியாபார முறைமை (Automated trading system)

17. X கம்பனியானது கட்டடங்களை நிர்மாணிக்கும் ஒரு கம்பனி ஆகும். கட்டட ஒப்பந்தங்களைச் சரியான நேரத்தில் முடிப்பதற்கு போதுமான அளவில் பொருத்தமான வேலையாட்கள் வழங்கப்படுவதில்லை என்பது இக்கம்பனியின் முன்வரிசை முகாமையாளர்கள் எப்பொழுதும் கூறும் புகார் ஆகும். இது கம்பனியின் எப்பிரச்சினைகளைக் குறித்து நிற்கின்றது?
   (1) வேலை விவரணம் (job description)
   (2) மனிதவளத் திட்டமிடல்
   (3) பயிற்சியும் அபிவிருத்தியும்
   (4) செயல்திறன் மதிப்பீடு
   (5) அறிமுகப்படுத்தல்

18. பின்வருவனவற்றுள் மனித வளங்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான மிகவும் சரியான கூற்றைத் தெரிவு செய்க
   (1) பயிற்சி முகாமையாளர்களுக்குரியதுடன் அபிவிருத்தி முகாமையாளரல்லாதோருக்குரியதாகும்.
   (2) பயிற்சி நிகழ்ச்சியானது ஒரு குறுங்காலமானதாக இருப்பதுடன் அபிவிருத்தி நிகழ்ச்சிகளானது நீண்ட காலமானதாகக் காணப்படுகின்றது.
   (3) வேலையொன்றின் சாத்தியமான திறன்களை (potential skills) அதிகரிப்பதற்கு பயிற்சி பயன்படுத்தப்படுவதுடன் வேலையொன்றின் தற்போதைய திறன்களை (prevailling skills) அதிகரிப்பதற்கு அபிவிருத்தி பயன்படுத்தப்படுகின்றது.
   (4) எண்ணக்கருவாக்கத் திறன்களை வழங்குவதற்குப் பயிற்சி பயன்படுத்தப்படுவதுடன் செயற்பாட்டுத் திறன்களை வழங்குவதற்கு அபிவிருத்தி பயன்படுத்தப்படுகின்றது.
   (5) பயிற்சி நிகழ்ச்சிகளுக்குக் கூடுதலான செலவு ஏற்படுவதுடன் அபிவிருத்தி நிகழ்ச்சிகளுக்கு ஒப்பீட்டளவில் குறைந்தளவு செலவே ஏற்படுகின்றது.

[பக். 5 ஐப் பார்க்க

19. பின்வருவனவற்றுள் ஊழியர் செயல்திறன் மதிப்பீட்டின் (performance evaluation) அபிவிருத்தி நோக்கமாக கருதப்படுவது எது ?
   - (1) ஊழிய உற்பத்தித் திறன் அதிகரிப்பு
   - (2) மனிதவளத் திட்டமிடல்
   - (3) தெரிவு செய்தலும் கூலிக்கமர்த்தலும் (selection and hiring)
   - (4) கூலி சம்பளத் தீர்மானங்கள்
   - (5) பதவி உயர்வுகளும் இடமாற்றங்களும்

20. வணிகமொன்றின் இலட்சிய நோக்கைக் (mission) குறிப்பிடுவதற்கு வணிகத் திட்டத்தில் மிகவும் பொருத்தமான பிரிவு
   - (1) வணிக விவரணம் (business description)
   - (2) செயற்பாட்டுத் திட்டம் (operational plan)
   - (3) சந்தைப்படுத்தல் திட்டம்
   - (4) நிதித் திட்டம்
   - (5) பின்னிணைப்பு (appendix)

※ **21** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்குப் **பொருத்தமான சொற்களுடன்** வெற்றிடங்களை நிரப்பி விடையளிக்க.

21. குடும்பம் மற்றும் வகிபாக மாதிரிகள் (role models) ஆகியவை முயற்சியாண்மையின் அபிவிருத்தி மீது செல்வாக்குச் செலுத்தும் .............................. காரணிகள் ஆகும்.

22. கட்டுப்படுத்தல் செயன்முறையில் பெறுபேறுகளை அளவிடுவதற்கு உருவாக்கப்பட வேண்டியது .......................... ஆகும்.

23. முகாமையாளர் ஒருவருக்குப் பல எண்ணிக்கையான கீழ்மட்ட ஊழியர்கள் (subordinates) நேரடியாக அறிக்கை சமர்ப்பிப்பதனை விவரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பதம் ............................................ ஆகும்.

24. வாடிக்கையாளரது கட்டளைகளை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி முறையை ...................................... என அழைக்கலாம்.

25. உற்பத்திப் பொருள் வாழ்க்கை வட்டமானது (product life cycle) 1. அபிவிருத்திக் கட்டம், 2. ......................................,
3. ........................................................ 4. ..........................................................,
5. ............................................. ஆகிய ஐந்து கட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

26. முழுமைப் படைப்பு சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின் (holistic marketing concept) பிரதான மாறிகள்
1. ............................................, 2. ......................................, 3. .........................................,
4. ................................................. என்பவனவாகும்.

27. சாதாரண பங்குகள் நீண்ட கால ................................................ நிதி மூலம் ஆகும்.

28. நிறுவனமொன்று முதற்தடவையாகப் பொதுமக்களுக்குப் புதிய பங்குகளை வழங்கும் சந்தை ............................ ஆகும்.

29. நிறுவனமொன்றின் வேலைகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளை கவருகின்ற செயன்முறை ................. .............................. என அழைக்கப்படும்.

30. குறித்தவொரு வேலையின் பணிகளை எடுத்துக் காட்டுவது .......................................... எனவும் வேலையை செய்ய வேண்டியவருக்கு இருக்க வேண்டிய தகுதியை விவரிப்பது ........................................ எனவும் அழைக்கப்படும்.

[பக். 6 ஐப் பார்க்க

※ **31** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு மிகப் **பொருத்தமான விடைகளைத்** தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.

31. SMED இற்கான நிதியத்தை ஏற்பாடு செய்துள்ள வெளிநாட்டு முகவராண்மை எது ?

.....................................................................................................................

32. குறிக்கோள் ஒன்றின் **ஐந்து** சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

1. ........................................ 2. ........................................

3. ........................................ 4. ........................................

5. ........................................

33. பொருளாதார கட்டளைக் கணியத்தைக் கணிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் **இரண்டு** பிரதான கிரய வகுதிகளும் எவை ?

1. ........................................ 2. ........................................

34. தேவைக்கேற்ப சரியான நேரத்தில் சரியான அளவு மூலப் பொருட்களை மட்டும் வழங்குவதற்கு வடிவமைக்கப் பட்டுள்ள முறைமை எது ?

.....................................................................................................................

35. நுகர்வுப் பொருட்களை வகைப்படுத்துக.

1. ........................................ 2. ........................................

3. ........................................ 4. ........................................

36. கட்லொக் பட்டியை (catalogues) வழங்குவதன் மூலம் விற்பனை செய்வது தொடர்பில் மேம்படுத்தல் கலவையில் உள்ள மாறி எது ?

.....................................................................................................................

37. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பொது வரையறுத்த கம்பனி ஒன்றிற்காகக் கிடைக்கின்ற பட்டியலிடல் முறைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

1. ........................................ 2. ........................................

3. ........................................

38. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தினால் சந்தை நிலைமைகளை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் பிரதான **இரண்டு** பங்கு விலைச்சுட்டிகளைக் குறிப்பிடுக.

1. ........................................ 2. ........................................

39. நிறுவனமொன்றில் காணப்படும் ஊழியர் நகர்வு முறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

1. .....................................................................................................................

2. .....................................................................................................................

3. .....................................................................................................................

40. குறிப்பிட்ட முகாமைத்துவ பதவிகளுக்கு (positions) சாத்தியமான பிரதியீடுகளை அடையாளம் காண்பதற்கான திட்டமிடல் முயற்சி எது ?

.....................................................................................................................

※ ※

[பக். 7 ஐப் பார்க்க

The National e-Learning Portal for The General Education

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

32 T II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2010 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2010 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2010

ව්‍යාපාර අධ්‍යයනය II (II කොටස)
வணிகக் கல்வி II (பகுதி II)
**Business Studies II (Part II)**

அறிவுறுத்தல்கள் :

※ **1** ஆம் **2** ஆம் வினாக்கள் உட்பட **நான்கு** வினாக்களுக்கு விடையளிக்க.

1. (i) **முயற்சியாண்மையை** வரையறுப்பதுடன் முயற்சியாண்மையின் **நான்கு** பிரதான சிறப்பியல்புகளையும் குறிப்பிட்டு விளக்குக.

(ii) 'வளங்களை மிகவும் வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு மட்டும் முகாமைத்துவ நுட்பங்கள் முக்கியமானவை அல்ல.' இக்கூற்றை நியாயப்படுத்துக.

(iii) வகைகூறல் (accountability), அதிகாரம் (authority) மற்றும் கையளித்தல் (delegation) ஆகிய எண்ணக்கருக்களை விளக்குக.

(iv) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளினூடாக உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனமொன்று பெற்றுக் கொள்ளக்கூடிய அநுகூலங்களை விளக்குக.

(v) க.பொ.த. உயர் தரத்தின் பின்னர் நீர் கல்வி கற்பது தொடர்பாகப் பல்வேறுபட்ட கற்கைநெறிகள் பற்றியும் நீரும் உமது நண்பர்களும் கலந்துரையாடுகிறீர்கள். சந்தைப்படுத்தல் கற்கைநெறியொன்றை கற்கப் போகின்றேன் என நீர் கூறுகின்றீர். அப்போது 'சந்தைப்படுத்தலில் ஒன்றுமில்லை. பொருட்களை விற்பது மட்டும்தான் அதற்குமேல் அதில் ஒன்றுமே இல்லை.' என உமது நண்பர் ஒருவர் கூறுகின்றார். 'ஆமாம்! சகல சந்தைப்படுத்துவோரும் விளம்பரப்படுத்தலைச் சரியாகச் செய்கின்றார்கள்' என வேறொரு நண்பர் கூறுகின்றார்.
வணிகக் கல்வியை கற்ற ஒரு மாணவன் என்ற வகையில் உமது நண்பர்களின் கருத்துகளுக்கு எதிராக உமது தர்க்கரீதியான அம்சங்களைச் சமர்ப்பிக்குக.

(vi) **எதிர்பார்க்கப்பட்ட உற்பத்திப்பொருள்** (expected product), **விருப்ப உற்பத்திப்பொருள்** (augmented product), மற்றும் **மறைந்துள்ள உற்பத்திப்பொருள்** (pontential product) ஆகியவற்றின் மூலம் கருதப்படுவது யாது ?

*(03 × 6 = 18 புள்ளிகள்)*

2. (i) பின்வருவன விளம்பரப்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படும் சில ஊடகங்கள் ஆகும். ஒவ்வொரு ஊடகத்தினதும் **ஒவ்வொரு** சாதகம் மற்றும் பாதகத்தைக் குறிப்பிடுக. பின்வருவது போன்ற அட்டவணையொன்றினைப் பயன்படுத்தி உமது விடையைத் தருக.

| ஊடகம் | சாதகம் | பாதகம் |
|---|---|---|
| தொலைக்காட்சி<br>வானொலி<br>செய்திப் பத்திரிகை<br>சஞ்சிகை<br>இணையம்<br>பதாகை (banner) | | |

(ii) (அ) ஒரு பங்குதாரர் தொடர்பில் சாதாரண பங்குகள் மற்றும் முன்னுரிமைப் பங்குகளுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(ஆ) நேர் மற்றும் நேரில் மூலங்கள் என்ற தலைப்புகளின் கீழ் பின்வரும் நிதி மூலங்களை வகைப்படுத்துக.
❋ வங்கி மேலதிகப் பற்று ❋ நிறுத்தி வைத்த இலாபங்கள் ❋ சாதாரண பங்குகள் ❋ குத்தகை

(iii) கடன் தீர்க்கும் ஆற்றல் (solvency), இலாபத்தன்மை (profitability) மற்றும் செயற்பாட்டு நடவடிக்கை (operating activity) ஆகிய ஒவ்வொன்றையும் அளவிடப் பயன்படுத்தக்கூடிய **ஒவ்வொரு** விகிதத்தைக் குறிப்பிடுவதுடன் அவற்றை எவ்வாறு கணிப்பிட முடியும் என்பதையும் குறிப்பிடுக.

(iv) நீர் வணிக நிறுவனமொன்றின் மனிதவள முகாமையாளர் எனக் கொள்க. கணக்கு உதவியாளராக நபரொருவரை நியமிப்பதற்குத் திட்டமிடுகின்றீர். இப்பதவிக்கான (position) வேலை விவரணத்தையும் வேலை குறித்துரைத்தலையும் தயாரிக்குக.

(v) பரந்த பல்வேறுபட்ட நலன்களையும் (fringe benifits) வழங்குவது என்பது வணிக உடைமையாளருக்குச் செலவு வாய்ந்ததாக உள்ளபோதும் கூட அண்மைக் காலங்களில் இதில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுகின்றது.

(அ) பல்வேறுபட்ட நலன்கள் என்பதன் மூலம் கருதப்படுவது யாது ? உதாரணங்களுடன் விளக்குக.

(ஆ) பல்வேறுபட்ட நலன்களையும் ஊழியர்களுக்கு வழங்குவதனூடாக நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் எவை ?

(vi) ஒரு வணிகத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய முக்கியமான பகுதிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

*(03 × 6 = 18 புள்ளிகள்)*

[பக். 8 ஐப் பார்க்க

3. (i) இலங்கையின் பொருளாதாரத்துக்கு சிற்றளவு வணிகங்களால் வழங்கப்படும் பிரதான பங்களிப்புக்களை அடையாளப்படுத்துக.

(ii) கட்டுப்பாட்டுச் செயன்முறையின் கட்டங்களைக் குறிப்பிடுவதுடன் இவ்வொவ்வொரு கட்டங்களும் மற்றொன்றுடன் எவ்வாறு தொடர்புபட்டுள்ளது என்பதையும் விளக்குக.

(iii) (அ) நெறிப்படுத்தல் என்பதன் மூலம் கருதப்படுவது யாது ?

(ஆ) முறைசார்ந்த மற்றும் முறைசாரத் தொடர்பாடல்களை உதாரணங்களுடன் தனித்தனியாக விளக்குக.

(iv) (அ) உற்பத்தியாளர்களுடைய நோக்கில் இருந்தும் இறுதியாகப் பயன்படுத்துவோர் நோக்கில் இருந்தும் உற்பத்திப்பொருட்களை விநியோகிப்பது தொடர்பில் இடைநடுவர்களைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் அநுலங்களையும் பிரதிகூலங்களையும் தனித்தனியாகக் குறிப்பிடுக.

(ஆ) பொருட்கள் (goods), சேவைகள் (services), எண்ணங்கள் (ideas), என உற்பத்திப்பொருட்களை (products) பாகுபடுத்த முடியும். இந்த வகைப்படுத்தலில் **எண்ணங்கள்** என்பதனால் கருதப்படுவது யாது ?

*(03 × 4 = 12 புள்ளிகள்)*

4. (i) ***பிரச்சினைகள், எண்ணங்கள்*** மற்றும் ***வணிக வாய்ப்புக்கள்*** போன்றவற்றை விளக்குவதுடன் அவை எவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்புபட்டுள்ளன என்பதனையும் எடுத்துக் காட்டுக.

(ii) (அ) திட்டமிடல் செயன்முறையின் பிரதான தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக.

(ஆ) திட்டமிடலின் நன்மைகளை விளக்குக.

(iii) பின்வருவனவற்றுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(அ) கணனி உதவியுடனான உற்பத்தி செய்தல் (computer aided manufacturing)

(ஆ) முதன்மைக் காலம்/ விநியோகக் காலம் (lead time)

(இ) தர வட்டங்கள் (quality circles)

(iv) கிரயம் சார்ந்த விலையிடல் (cost oriented pricing) போட்டிசார்ந்த விலையிடல் (competion oriented pricing) மற்றும் வாடிக்கையாளர் சார்ந்த விலையிடல் (customer oriented pricing) ஆகிய முறைகளைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.

*(03 × 4 = 12 புள்ளிகள்)*

5. (i) கீழ்க் குறிப்பிடப்படும் தலைப்புகளின் கீழ் விற்பனை எண்ணக்கருவையும் முழுமைப் படைப்பு சந்தைப்படுத்தல் எண்ணக்கருவையும் ஒப்பிட்டு வேறுபடுத்துக.

- ❊ தொடக்கநிலை (starting point)
- ❊ வெளிப்படுத்தல் (focus)
- ❊ கருத்துகள் (means)
- ❊ முடிவுகள் (ends)

(ii) துஷ்யந்தன் கம்பனியானது ஒரு பொது வரையறுத்த கம்பனியாகும். இதனது கூறப்பட்ட மூலதனம் 50 மில்லியன்கள் ஆகும். வழங்கப்பட்ட பங்குகளில் 50 % மான பங்குகள் பொதுமக்களால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இக்கம்பனியானது கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் (CSE) பட்டியலிடுவதற்கு எதிர்பார்க்கின்றது.

(அ) இக்கம்பனி பட்டியற்படுத்துவதற்குத் தகுதியுடைய பலகை (board) எது ?

(ஆ) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியற்படுத்தப்படுவதனால் இக்கம்பனி அடைந்து கொள்ளக்கூடிய அநுகூலங்கள் யாவை ?

(iii) பின்வருவன பணச்சந்தையிலும் மூலதனச்சந்தையிலும் பயன்படுத்தப்படும் கருவிகள் ஆகும்.

- ❊ வணிகத்தாள்கள்
- ❊ திறைசேரி முறிகள்
- ❊ ரூபாய் பிணைகள் (rupees securities)
- ❊ திறைசேரி உண்டியல்கள்
- ❊ சாதாரண பங்குகள்
- ❊ தாபன முறிகள்

**பணச்சந்தை, மூலதனச்சந்தை** என்பதன் கீழ் மேற்கூறப்பட்ட கருவிகளை வகைப்படுத்துவதுடன் அவற்றை வழங்குகின்ற நிறுவகங்களையும் கருவியின் முன்னால் குறிப்பிடுக.

(iv) நிறுவனமொன்றின் மனிதவள முகாமையாளராக உம்மைக் கருதிக் கொள்க. தொழிலாளர்கள் தொடர்பான தொழிற்சங்கம் உமது நிறுவனத்தில் காணப்படவில்லை. உமது நிறுவனத்தைச் சேர்ந்த சில தொழிலாளர்கள் தொழிற்சங்கமொன்றை அமைப்பது தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபடுகின்றார்கள் என தற்போது கேள்விப்படுகின்றீர். இந்நிலைமையில் உமது பிரதிபலிப்பை விளக்குக.

*(03 × 4 = 12 புள்ளிகள்)*

6. (i) பொது வரையறுத்த கம்பனி ஒன்று தனது வணிகத்தை விரிவுபடுத்துவதற்கு மேலதிகமான நிதித் தேவையை வேண்டி நிற்கின்றது. இம்மேலதிக நிதியை உரிமை மூலதனத்தினூடாகவா அல்லது கடன் மூலதனத்தினூடாகவா அல்லது இவ்விரண்டையும் கலந்த முறையிலா பெற்றுக்கொள்வது என்பது பற்றி கம்பனியானது கருத்திற் கொள்கின்றது. இந்நிலைமையின்போது நிதி முகாமையாளரானவர் கருத்திற்கொண்டு தீர்மானம் எடுக்கக்கூடிய **மூன்று** காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(ii) வணிக நிறுவனம் ஒன்றில் மனிதவள முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(iii) (அ) மனிதவள முகாமைத்துவத்தில் **தெரிவுசெய்தல்** என்பதனால் கருதப்படுவது யாது ?

(ஆ) தெரிவுசெய்தல் முறைகள் **நான்கைக்** குறிப்பிட்டு விளக்குக.

(iv) சிற்றளவு வணிகம் ஒன்றை அண்மையில் ஆரம்பித்த சாரங்கா என்பவரால் ஒரு வணிகத்திட்டம் சம்பந்தமாக கூறப்பட்ட கருத்துகள் வருமாறு;

'வணிகத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு கூடுதலான காலம் எடுக்கின்றது. அது மட்டுமல்ல கூடுதலான பணத்தை இதற்காகச் செலவு செய்துள்ளேன். இருந்தபோதும் இது சம்பந்தமாக கூடுதலான அறிவு எனக்கு இல்லை. ஆகையால் எனது சொந்த வழியிலேயே எனது வணிகத்தைச் செய்கின்றேன்.'

வணிகத்திட்டம் பற்றி கற்ற மாணவன் என்ற முறையில், சாரங்காவுக்கு நீர் வழங்கக்கூடிய அறிவுரைகள் யாவை ?

*(03 × 4 = 12 புள்ளிகள்)*

❊❊❊